DUPLICATE
புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதிஞு (1889)
ஆவணிமீ ௨௨
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.		
யாழ்ப்பாணப் பட்டினம்:	ஞு 1-க்கு	ரூ. 2-80
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 4-70
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 4-70
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.		
முதன் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒருஅங்குலம்	-65

அடுத்தமுறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி விளம்பரங்கள் முற்பணமனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௩. } யாழ்ப்பாணம்:—துர்மதிஞு பங்குனிமீ ௧௭௨, ௧௯௨௨-ம் ஆ மார்ச்மீ ௩0௨. { இலக்கம்—௩௭

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிஞ அணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

அசாதிரோகங்கட்குப் பிரத்தியட்ச அவுஷதங்கள்.

நமது மருந்துகளின் குணங்களை அநேக ஜனங்கள் அறிந்திருப்பதால் அதிகஞ் சொல்லத்தேவையில்லை.

காமவிலாச லேகியம்
அல்லது
சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைச் [illegible] அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் நன்மை சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்பொழுது இந்த லேகியத்தைப் பிரசுரித்துவருகிறேன். இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாறு, சம்பேத்முஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, வாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகப்ஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிப்பஸ்பம், அயகாந்தபஸ்பம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும்அநேகபுஷ்டியான மூலிகைவகைகளுஞ்சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நீரிழிவு, வெள்ளை, நீர்மாவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துக்குள் உண்டாயிருக்கும் அண்டவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிடுவதால் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் பலநோய்கள் தீர்ந்து பாலை விருத்திசெய்து தேகத்திற்குப் புஷ்டியையும் பலத்தையுந்தரும்.

இறாத்தல் ஒன்று விலை ரூபா 22. கால் இறாத்தலுக்குக் குறைய அனுப்பப்படமாட்டாது.

கஸ்தூரி திராவகம்.

இந்தத்திராவகத்தில் ஒருநேரத்திற்குநான்கு சொட்டு வீதம் ஒரு ஒயின் கிளாஸ் ஜலத்தில் விட்டு காலை, மாலை, இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீரழிவினால் தாங்க முடியாத வருத்தமும் மூன்றுநாளையில் சுகந்தெரியும். 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு, துர்நடத்தையால் புருஷசக்தியற்று இருப்பவர்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட இந்த திராவகமும், பிரதான நரம்பிற் பூச தஜ்ஜிபங்க தைலமும் எடுத்து உபயோகிக்கவேண்டியது. இன்னும் இத்திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிக நாட்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளைப்பலயீனம், ஞாபகசக்திக் குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு, நாட்சென்ற பிரமேகம் இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரகப்ஸ்பம், சாம்பிராணிப் பதங்கம், வேறு மூலிகைவகைகளுஞ் சேர்த்துத் திராவகம் வடித்து வைத்திருக்கிறேன். இந்த மருந்தைக் கொடுத்து அநேக பிணியாளிகளைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன். இப்போது எல்லாருடைய பிரயோசனத்திற்காகச் சொற்ப கிரயத்திற்கு வெளியே பிரசித்தம்பண்ணியிருக்கிறேன். இந்த ஔஷதம் பித்தபாண்டு, மகோதரம், காய்ச்சற்கட்டி, வயிற்றிலிருக்கும் ஜர்நீர்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

20 நாளைக்குச் சாப்பிடக்கூடிய அரை அவுன்சுக்கு விலை ரூபா 10. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

தஜ்ஜிபங்க தைலம்.

விபத்து நேர்ந்தகாலத்தில் ஓர் அருமையான மித்திரன் உதவுமாப்போல் இத்தைலம் தேஸ்வக்காகிய நரம்பிற் பூசுவதால் அற்றுப்போன சக்தி திரும்பஉண்டாகும். ஒரு அவுன்ஸ் விலை ரூபா 2-50.

மிருத்துசஞ்சீவன அல்லது கஸ்தூரிமாத்திரை.

இம்மருந்தால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சுகமடைந்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் அதன் குணகுணத்தை எமக்குக் கடிதமூலமாகவும் முகாமுகமாகவும் வியந்து புகழ்ந்துபேசியுமிருக்கிறார்கள். அன்றியும், எமது அநுபவமாய்க் கொடுஞ்சந்நியாசம் [illegible] பீடித்திருந்த அநேக வியாதியஸ்தர்களையும், இன்னும் அநேக மலேரியா முதலிய விஷக் காய்ச்சற்காரரையுஞ் சுகப்படுத்தியுள்ளோம்.

எட்டுவிதமான சுரத்திற்கும், அசுத்தஜலத்திலிருந்து உண்டுபடும் கொசுமுதலான விஷஜீவ ஜெந்துக்கள் கடிக்கிறதினு லுண்டாகும் மலேரியா முதலான விஷக் காய்ச்சல்களுக்கும், பதினெட்டுவிதமான ஜன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட ஜன்னியும் ஒன்று அல்லது இரண்டுவேளை மருந்தில் குணந்தெரியும். பெரியவர்கள் 2 மாத்திரையும், சிறியவர்கள் 1 மாத்திரையும் ஏழுவேளை சாப்பிட்டால் ஜன்னி காய்ச்சல் முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். 12 குளிகைகளின் விலை ரூபா 2.

வீரிய ஸ்தம்பனக் குளிகை.
இது ஒரு தேவ ஔஷதம்.

இத்த அமிர்தம் போன்ற ஔஷதத்தை உட்கொள்ளுவதனால் சூரியனைக்கண்ட அந்தகாரம் நீங்குமாப்போல் அநேக வியாதிகள் ககப்படு வதுமன்றி இரத்தசுத்தி சரீரசக்தி கொடுக்கும் ஒரு தேவ ஔஷதம். இம்மருந்தின் விரிவான குணங்களை அறிய விரும்புவோர் எமது கட்லாக்கைத் தருவித்துப் பார்த்துக்கொள்ளலாம். 12 குளிகை விலை ரூபா 2.

சங்கரக் குளிகை
அல்லது
மாதாந்த சுத்திசேய் குளிகை.

மாதாந்தரம் மாதவிடாய் காணுமல் நின்றுபோய் அதனாலுண்டாகும் வயிற்றுவலி, இடுப்புவலி, கைகால் உளைச்சல், காந்தல், மண்டை வலி, திமிர், கண் காந்தல், பார்வைக் குறைவு, பெலவீனம், அஜீரணம், ஓங்காளம், நெஞ்சு ஏப்பம், கட்டி வாய்வு, மலச் சிக்கல், மூலச்சூடு, சிலருக்கு மாதவிடாய் காணுமலும், சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குச் சொற்பமாகவும், சிலருக்கு மாதவிடாய் உண்டாகுமுன் வயிற்றுவலி முதலிய ரோகங்கள் கண்டு இடைவிடாது அயரத்தக்கனவர்களாகிறார்கள். இவ்வியாதி லட்சணங்களை இன்னும் மேலதிகமாய் அறிய விரும்புபவர்கள் எமது கட்லாக்கைத் தருவித்துப் பார்த்துக்கொள்ளலாம். 21 நாள் சாப்பிடக்கூடிய 42 குளிகை விலை ரூ. 5.

இரசமணி.

அரைஞாணிற் சேர்த்து இடுப்பில் கட்டிக்கொள்ளக்கூடிய பெரியமணியின் விலை ரூபா 3 அணு 8. சிறியமணியின் விலை ரூபா 1 அணு 8. தபாற்செலவு பிரத்தியேகம். இந்த மணி இடுப்பி லிருந்தால் பேய், பிசாசு, சூனியம், சொப்பனம் முதலியவை அருகில் வரமாட்டா. மேலும் அநேகவிதமான வாய்வு, பிரமேகம், நீர்க்கடுப்பு, பீனிசம், கபாலச்சூடு முதலிய நோய்கள் தீரும்.

தத்கஜகேசரி.

சொறிக்கரப்பன் அதாவது சொறித்தேமல், சொறிசிரங்கு, சொறிக்குஷ்டம், சரீரத்தின் தோலில் தடிப்பேறிய கருங்குஷ்டம், போக்கிக்கால் அதாவது யானைக்காலில் வெடிப்புண்டாகி அதிலுண்டாகும் புழுக்களுக்கும், இன்னும் தோல் சம்பந்தமான வியாதிகட்கும் கைகண்ட களிம்பு. இக்களிம்பு என்னும் பூச்சு மருந்து சொறிக்கரப்பன் அல்லது சொறித்தேமலுக்கும் பூசினால் இரண்டு நிமிஷத்திற் குணங்காணலாம். எட்டு நாட்களில் பூர்த்தியாய்ச் சுகங்கிடைக்கும். மேற்சொல்லிய மற்றும் வருத்தங்கட்குச் சிலநாட் பாவித்தபின் சுகங்கிடைக்கும். விலை அரை டின் சதம் 50. முழு டின் ரூபா 1.

மேற்கூறியமருந்துகள்யாவுநறித்தும் தபாற்கூலி பிரத்தியேகம். தொடுவாய் இராச்சியங்கட்கு வி. பி. கட்டளைச்சட்டம் இல்லாததால் மருந்து தருவிக்க விரும்புவோர்கள் முற்பணம் அனுப்பவேண்டியது.

எம். கேங்காப்பிரசாத் பண்டிதர்,
ஆயுர்வேதஆரோக்கியதாக்கர்வைத்தியசாலை,
69-ம் நெ., முதலாம் [illegible] குறுக்குத்தெரு,
[illegible] [illegible]மருதானை, கொழும்பு.

கடிதமெழுதுவோர் இப்பத்திரிகையையும் குறிப்பிடுக. (Y. 4.)

ஒருரூபாவுக்குப் பத்துச்சதம் இலாபம்.

(Y. 6.)

தற்காலம் எந்தவிதமான சாய்ப்புச் சாமான்களும் நோயாளருக்காகிய உணவு வகைகள் மருந்து வகைகளும் வேண்டியவர்கள் எங்களிடம் வாங்கிக்கொள்ளலாம். சிமைச்சாமான்கள் விலை அதிகம் என்று சொல்லிச் சிலர் கண்டபடி விலை ஏற்றிவிற்கிறார்கள் என்பதை அறிந்து விலையைப் பல இடங்களிலும் விசாரித்து எங்களிடம் வந்தால் ரூபாவுக்குப் பத்துச்சதம் நயம் என்பதை நன்கு அறியலாம்.

இங்ஙனம்,
யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ் கம்பனி,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

காசிநாடா சேலை. 16முழநீளம், 2¼முழ அகலம்.

இது உயர்ந்த மல்லில் கெட்டித்தரசாயமுள்ளதாகவும் புட்டாக்கள் போட்டிருக்கும். விலை ரூ. 5-8-0.

காளாஞ்சிரி சிவப்பு சேலை.

இது சாயம் கெட்டிததரமாகவும் சுற்றிலும் நேர்த்தியான கரை கட்டியிருக்கும். விலை ரூ. 5-0 0.

☞ துணிக்கும் சாயத்திற்கும் உத்திரவாதம்.

விலாசம்:-டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
பார்க்டவுன் போஸ்டு,
(Y. 8.) மதராஸ்.

சாலாமிஸ்ரி லேகியம்.

(M. 1)

இந்தலேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ்சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகப்ஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயகாந்தசிந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைறாத்தலுக்கு ரூபா ௧௦. கால்றாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 91, முதல் மருதானை,
கொழும்பு.

நேத்ராமல தைலம்.

ஓர் அதிசயமான எண்ணெய்.

(H. 3.)

எவ்வளவு கடுமையான நோய்களையும் கண்டிக்கத் தக்கதும், விலைமதிக்கப்படாததும், உடனேக்குடனே நோய்களைக் கண்டிக்கத் தக்கதுமான ஆச்சரியமுள்ள ஓர் எண்ணெய். பீனிசத்துக்கும், மற்றும்விதமான கண்களிலுண்டுபடும் நோய்களுக்கும், தலையிடி, தலைச்சுற்று, இளம்பிராயத்திலுள்ள நரை, சொடுகு, பல்வலி, பல்லாட்டம், பற்பேந்தைகள், இன்னும் ஏற்றும் தலையில், காதுகளில், பற்களிலுண்டுபடும் நோய்கள், நாவிலும், வாயிலும், நாசியிலுமுள்ள கட்டிகள், வாயிலுள்ள வறட்சி, தசையிலுள்ள கோவைகள், அளவுக்குமிஞ்சின நித்திரை, மற்றும் கழுத்துக்கு மேலுள்ள நோய்களுக்கும், வாதத்துக்கும் உபயோகப்படும். இந்த எண்ணெய் சித்தியுள்ளது, ஓர் பேர்போன வைத்தியருக்குப்பதிலாக இந்த எண்ணெயை எல்லாவீடுகளிலும் வைத்திருக்கவேண்டியது. ஒவ்வொருவருடைய தேகத்திலும் இந்த எண்ணெய் இருக்குமேயானுல் பாம்பும் அவர்களின்கிட்ட நெருங்காது. பரம்பரையாக எங்கள் குடும்பங்களில் இந்தஎண்ணெயை விலைமதிக்ககூடாத இரகசியமான மருந்தாய் வைத்திருந்தேம். இப்போது அதைக் கூடியஅளவு பிரசித்திபடுத்தலாமென்று எண்ணினேன்.

யாருமிலும் மச்சம், மாமிசம், மதுபானம், இவைகளை [illegible] விலக்கி, இந்த எண்ணெயை ஒருநாம் பாவித்துப் பார்த்தால் ஒரு பெருமதியுடையவராவர். இதை நசியம்செய்யலாம், தலையிற்பூசலாம், அல்லது உள்ளே பாவித்துக்கொள்ளலாம் அதுவுந்தவிர ஞாபகக் குறைச்சல் உள்ளவர்களுக்கு ஞாபகசக்தியையும், மூளையில்உள்ள அர்வியாதிகளையும் இன்னும் பலவிதமான தலையிலுள்ள வியாதிகளையும் கண்டிக்கக்கூடிய ஓர் அபூர்வமான ஒரு அவுஷதம்.

சிறுபோத்தல் தேவையுள்ளவர்கள் தபாற் செலவுடன் ரூபா. 2·85 முன்பணமாக அனுப்பவேண்டியது. மற்ற போத்தல் தைலம் தேவையுள்ளவர்கள் வி. பி. மூலமாக அனுப்ப வேண்டுமாளுல் நான்கிலொருபங்கு முன்பணம் அனுப்பவேண்டியது. இதரதேசங்கட்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

1	போத்தல்	ரூ.	25·00
½	,, ...	,,	14·00
¼	,, ...	,,	7-50
1சிறு	,, ...	,,	2·50

விலாசம்: தி. பீ. விஜயகோன்,
குருநாக்கல்.

T. B. Wijeyakoon,
Native Medical Practitioner,
Kurunegalla.

இரவில் மணி பார்க்கும் 8 மூலை ரேடியம்.

றிஸ்லெட் கெடிகாரம்.



கெடிகாரம் 1-க்கு ரூபா 7 8 0.
கெடிகாரம் 1-க்கு ரூபா 6 8 0.

கொட்டால், சிங்கப்பூர், மோரிஸ், முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வீ. பீ. யில் அனுப்ப முடியாது.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
பார்க்டவுன் போஸ்டு,
(Y. 10). மதராஸ்.

விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 4186-ம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கில் 1922-ம் ௵ மாசி ௴ 28-ந் தேதி வைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1922-ம் ௵ சித்திரை ௴ 8-ந்தேதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:—

விபரம்.

அளவெட்டியிலிருந்து காலஞ்சென்றுபோன கந்தவனம் சேனாதிராசா கைம்பெண் செல்லத்தின் ஆதனம்:—

1. அளவெட்டியிலுறை "கட்டுவிளாஞ்சேரி" பர. கி. இலா. 7¼ அதைச் சேர்ந்தவைகளும் எல்லை; கிழக்கு: பரமு சின்னப்புவின் ஆதனம், வடக்கு: கணபதி சேனாதிராசாவின் ஆதனம், மேற்கு: நாகமணிபெண் காசிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், தெற்கு: அருணாசலம்மகள் தெய்வானைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இடங்களிலும் அரைவாசி.

2: ஷையிலுறை "அத்துவான்கூடை" பர. கி. இலா 22 பனைகளும் மற்றும் அதைச்சேர்ந்தவைகளும் எல்லை; கிழக்கு: அத்துவான் கூடை பிள்ளையார்கோவிலாதனம், வடக்கு: வயிரவன் கணபதிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், மேற்கு: ஒழுங்கை, தெற்கு: குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார் கோவிலாதனமும் ஒழுங்கையும். இதில் காலிலொருபங்கும்.

3 ஷையிலுறை 'சோம்பாலவயல்' பர. நெல். இலா. 12 எல்லை: கிழக்கு சின்னத்தம்பி சரவணமுத்துவுக்கும் கணபதி சம்பந்தருக்கும் உடைய ஆதனங்கள், வடக்கு: இனியர் கைம்பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம், மேற்கு: வாய்க்கால், தெற்கு: சின்னத்தம்பி சரவணமுத்துவுக்கும் பெண் பொன்னுப்பிள்ளைக்குமுடைய ஆதனம்.

4 ஷையிலுறை "வியாப்பிட்டி" பர. கி. இலா. 22 எல்லை; கிழக்கு: சுப்பிரமணியம் பெண் வேதவள்ளிக்கும் கணபதிப்பிள்ளை இளையதம்பிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், வடக்கு: அருணாசலம் கைம்பெண் கதிராசியின் ஆதனம், மேற்கு: சுப்பர் கந்தருக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், தெற்கு: ஒழுங்கையும் சுப்பிரமணியம் பெண் வேதவள்ளிக்கும் உடைய ஆதனம்.

5 ஷையிலுறை "வடக்கு ஆலங்கூடல்" பர. நெல். இலா. 10 பனைகளும் எல்லை; கிழக்கும், வடக்கும்: ஒழுங்கை, மேற்கு: ஆறுமுகம் வயிரமுத்துவுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், தெற்கு: ராமுபெண் சிதேவனுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம்.

6 ஷையிலுறை "பெரியவயல் பர. கி. இலா. 25¾ எல்லை; கிழக்கு: பொன்னம்பலம் பெண் செல்லாச்சியின் ஆதனம், வடக்கு: கணபதியார் சரவணைக்கும் பங்காளருக்கும் மேதர் பாமுவுக்கும் உடைய ஆதனங்கள், மேற்கு: குமரு வல்லிபுரத்துக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், தெற்கு: குளம். இதிற் சொரியலாய் காலிலொருபங்கும்.

7. ஷையிலுறை 'வியாப்பிட்டி' பர. கி. இலா. 8 எல்லை; கிழக்கு: கணபதிப்பிள்ளை கந்தையாவின் ஆதனம், மேற்கு: நாகமணி செல்லையா பெண் இராசம்மாவின் ஆதனம், வடக்கு: சின்னத்தம்பி சரவணமுத்துவின் ஆதனம், மேற்கு நித்த காலஞ்சென்ற செல்லத்தின் ஆதனம்.

B. Emmanuel,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
1922-ம் ௵ பங்குனி ௴ 22உ.

(Mis. 194)

மெடிக்கல் டிப்பாட்மெண்டைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

அநுராசபுரம், சுகாயம், இரத்தினபுரி என்னுமிடங்களிலிருந்து சாமான்களை ஏற்றிக்கொண்டு போகக் கேரிக்க ஒப்பந்தம்பண்ண விரும்புவோர் மறுபடிகேள்விக்கடுதாசிகளனுப்பலாம். ஒப்பந்தங்கள் நிகழ்வது 1922-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1925 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30-ம் திகதி வரையுமுள்ள காலத்துக்கு.

கேள்விகள் கொழும்பு, பிரதான சிவில் மெடிக்க லாபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 'போம்' கடுதாசியிலே எழுதப்பட்டிருக்க வேண்டும். கேள்விக்கடுதாசிகள் ஒப்பந்த விசாரணைத் தலைவரின் கச்சேரிக்கு 1922-ம் ஆண்டு வைகாசிமாதம் 16-ந் தேதி மத்தியானம் 12-மணிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். நேரத்துக்குப் பிந்திய கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இதைப்பற்றிய மற்றும் விளம்பரங்களுக்கு அரசாட்சியாரின் கசற்றுப் பத்திரிகையைப் பார்க்கவும், அல்லது பிரதான சிவில்மெடிக்க லாபீசரிடம் எழுதிக் கேட்கவும்.

(G. 175.)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தான வரவு.

சண்டிருப்பாய் வடக்கு சாது பொன்னம்பல ஸ்வாமியவர்களால் தமது தாயார் தேவிநாச்சியாரின் அபரக்கிரியையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்குத் தானமாகவளித்தனுப்பிய ரூபா 2 பெற்றும்.

[இதுவரையும் இதனைப்பற்றி நாம் யாதும் தெரியாதிருந்ததற்கு மிகவும்வருந்துகின்றும். ப—ர்.]

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்—துன்மதி௵ பங்குனி௴ 17உ.

இலங்கைச் சர்வ கைத்தொழிற் பொருட்காட்சி.

இக்காட்சி கொழும்பிலே இந்த மார்ஜ் மாசம் 18உ ஆரம்பமாகி நடைபெறுகின்றது. நாளைத்தினம் இக்காட்சி முடிவாகும். இலங்கையிலுள்ள மாகாணங்கள் தோறும் அரிதிற் செய்யப்பட்ட கைத்தொழிற் பொருட்கள் பல இங்கே காட்சிக்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளன. நமது தேசாதிபதியவர்கள் இக்காட்சியை ஆரம்பிக்கச் சென்ற சமையத்தில் ஒரு சிறந்த உபந்நியாசஞ் செய்திருக்கின்றார். அவ்வுபந்நியாசம் இலங்கைத் தொழிலாளர்கட்கெல்லாம் பெரும் ஊக்கத்தைத்தரத்தக்கதாகும். இலங்கையிலே பலவிதமான அரிய பொருட்கள் உண்டாக்கப்படுகின்றனவெனலாம், இலங்கைவாசிகள் கைத்தொழிலிற் சிறந்தவர்களெனவும், ஊரவர்கள் அந்நியநாட்டுப் பொருட்களை வாங்குதலை யொழித்துத் தமது சொந்தவூரிற் செய்யப்படும் பொருட்களையே வாங்கி அதனால் தொழிலாளிகளை ஊக்கப்படுத்தவேண்டுமெனவும், இலங்கையிலுள்ள சகல கைத்தொழிற் பொருட்களிலும், இப்பொழுது நிகழும் சர்வ கைத்தொழிற் பொருட்காட்சிச் சங்கத்தினக்கிராசனராகிய ஸ்ரீ ஜெயவர்த்தன அவர்கள் ஸ்தாபித்திருக்கும் வஸ்திர நெசவுச் சாலைப் பொருட்களும், கழுத்துறையிற் செய்யப்படும் தொப்பிகளும் பெட்டிகளும் விசேஷமாக வியக்கத்தக்கனவெனவும், இந்தியாவிற் செய்யப்படுவனபோன்ற கம்பளங்களை இலங்கையிலும் செய்தால் அதனால் விசேஷ வருவாயுண்டெனவும், நமது இளவரசர் இலங்கைக்கு விஜயஞ்செய்யும் இச்சமையத்தில் இக்காட்சி ஆரம்பிக்கப் பெற்றமையால் இதற்குமுன்நிகழ்ந்த காட்சிகளைக்காட்டிலும் இம்முறை நிகழ்ந்த பொருட்காட்சி மிக விசேஷமானதெனவும், இலங்கைத் தொழிலாளர் கைத்தொழிலை விருத்தி செய்யவேண்டுமெனவும் மிகப் பரிந்து பேசினர்.

இவ்வருடம் நிகழும் பொருட்காட்சி மிக விசேஷமானதென்பதற்குச் சந்தேகமில்லை. இந்நாட்டிலுள்ள கைத்தொழிலை விருத்தி செய்வதற்காகவே இவ்வாறான காட்சிகள் இடையிடையே நடத்தப்படுகின்றன. இலங்கையிலுள்ள தொழிலாளர்கள், நுண்மையாசப் பொருட்களைச் செய்வதிலும் விடாமுயற்சியிலும் மற்றுந் தேசத்தவர்களிற் சிறிதேனுங் குறைந்தவர்களல்லர். கைத்தொழிற் பொருட்களுக்கான முதற்காரணங்களும் இலங்கையிற் பலவுள. (குடத்திற்கு மண் முதற் காரணம்.) இங்ஙனமெல்லா மிருப்பவும் இலங்கைவாசிகளாகிய நாம் உணவுப் பொருள்கட்கும் கைத்தொழிற் பொருள்கட்கும் அந்நியரை நம்பியிருக்கின்றேம். சென்ற பாரிய யுத்தகாலத்தில் மேலைத்தேசத்துப் பொருள்கள் இங்கு வராதொழிய, முந்தியுள்ள பொருட்கள் மும்மடங்கு நான்மடங்கு விலையாக விலைப்பட இலங்கை வாசிகளாகிய நாங்கள் பட்ட கஷ்டம் பெரிதாகும். நமது நாட்டிலேயே எங்கட்குப் போதிய உணவுப் பொருட்களையும், மற்றும் பொருட்களையும் நாங்கள் உண்டாக்கக்கூடிய வழிகளை அனுசரித்தால் நம்மைப் பஞ்சம் ஒருபோதும் அணுகமாட்டாது. ஆனால் கமத்தொழிலுக்காயினும் கைத்தொழிலுக்காயினும் அரசினருடைய உதவி பெரிதும் வேண்டும். ஆரம்பத்தில்மாத்திரமாயினும் அரசினர் இத்தொழில்கள் விஷயமாக இலங்கைவாசிகட்கு உதவிபுரிவரேல், அதனாற் பெருநன்மைகளுண்டாம். நமது தேசாதிபதியவர்கள் மேற்படி காட்சியில் பேசிய உபந்நியாசத்தில் அரசினரால் ஏதும் உதவி கிடைப்பதாகப் பேசவில்லை. தேசாதிபதியவர்கள் தமது உபந்நியாசத்தில் (The present time may not be one for us to be able—that is to say for the Government—to come forward and subsidise it) இந்தச்சமையத்தில் அரசினர் இந்த விஷயமாக ஏதும் உதவி செய்யத்தக்கதாகவிருக்கவில்லையென்னுங் கருத்தமையப் பேசியிருக்கின்றார். தேசாதிபதியவர்கள் இங்ஙனங் கூறியதற்குக் காரண[illegible]ம் யாதோ நாமறியேம். கமத்தொழிலாலும் கை[illegible]க்தொழிலாலும் ஒரு நாடு விருத்தியாகி அதிக செ[illegible] யடையுமாதலால் அதனாற் சனங்கட்கும் அ[illegible]களைப் பரிபாலிக்கும் அரசாங்கத்தாருக்கும் பெரும் நன்மையும் புகழுமுண்டாகுமே! மேலைத்தேசவாசிகளோ பெருஞ் சங்கங்களாகக்கூடிக் கமதொழில் கைத்தொழில்களை விருத்திபண்ணித் தமக்கும் பிறர்க்கும் நன்மை விளையச்செய்யும் திறமை வாய்ந்தவர்களென்பது உலகப்பிரசித்தம். அவர்கட்கு அரசினர் உதவி ஆவசியகமன்று. நம்மவர்களெனிலோ, சங்கங்களைக் கூடி இப்படிப்பட்ட தொழில்களை விருத்திபண்ணி அதனால் நன்மையடைய அறியாதவர்கள். ஆதலினாலேயே அரசினர் இவ்விஷயத்தில இலங்கைவாசிகட்கு ஆரம்பத்திலாயினும் உதவிசெய்து முன்மாதிரி காட்டிவைத்தல் வேண்டுமென யாம் கூறுகின்றேம். அரசினர் இப்பொழுது இங்ஙனஞ் செய்யா விட்டாலும் காலம்வாய்க்கும்போதாயினும் செய்வார்களென யாங் காத்திருக்கின்றேம்.

இற்க, நமது யாழ்ப்பாணத்தவர் இக் கைத்தொழிற் காட்சியிற் செய்த விஷயங்களைப்பற்றிச் சிறிது சிந்திப்பேம். இவர்கள் எக்காலத்திலும் இவ்வாறானபொருட்காட்சி நிகழுஞ் சமையங்களில் இலங்கையின் மற்றைப் பாகங்களிலுள்ள தொழிலாளிகள் பெறும் மதிப்பிற்குக் குறையாத மதிப்பைப் பெற்றுவருகின்றனர். யாழ்ப்பாணத்தவர் விடாமுயற்சி யுடையவர்களெனவும், நுண்ணிய கருமங்களைச் செய்யத் தக்கவர்களெனவும் பிறராற் புகழப்படுகின்றனர். நதி முதலிய நீர்வளமற்ற வரண்ட நாடாக நமது யாழ்ப்பாணமிருப்பவும், இங்கே செய்யப்படும் கமத்தொழிலும் தோட்டச் செய்கையும் யாழ்ப்பாணத்தவருடைய விடாமுயற்சியை நன்கு விளக்கும். இவர்கட்கு இத்தொழில்களை வேண்டிய அளவிற்கு விருத்தி செய்வதற்கு இத்தொழிலாளிகளிடத்திற் பணமில்லை. இவர்கள் வட்டிக்குப் பணமெடுத்துக் கமத்தொழிலையும் மற்றுந் தொழில்களையும் மிக்க சிரமத்துடன் செய்து ஈற்றில் அதனால் வரும் ஊதியம் முழுவதையும் தனிகனுக்குக் கொடுத்துவிட்டுச் சருகெரித்துக் கூதற்காய முயன்றவனைப்போல முட்டுற்றுநிற்கின்றார்கள். தனவந்தர்களாயுள்ளவர்கள் சங்கங்களாகச் சேர்ந்து இவர்கட்குப் பொருளையுதவி இவர்கள் மூலமாகக் கைத்தொழில் கமத்தொழில் என்னுமிவற்றைச் செய்விக்க முயல்வரேல், இதனால் இருதிறத்தாரும் லாப முறுவதுடன் நாடும் பஞ்சமின்றிச் செழித்தோங்கும். எங்கள் நாட்டிலேயே சிறந்த கமத்தொழிலாளரும் தேர்ந்த கைத்தொழிலாளர்களுமிருப்ப, அவர்கட்குத் தனவந்தர்களாயுள்ளவர்கள் திரவிய சகாயஞ் செய்து அவர்கள் மூலமாக அவ்விருவகைத் தொழில்களையும் விருத்திசெய்து நன்மை யடையாது, "வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்தேடுவார் போல்" அந்நியதேயப் பொருள்கட்கு அலைவுறுவது எத்துணை மதியீனம்! இனியாயினும் நம்மவர்கள் இதனைச் சிந்திப்பார்களாக.

இனி, யாழ்ப்பாணப் பொருட்காட்சிப் பந்தரில் நிகழ்ந்த பராக்கிரமச் செயலைப் பற்றி யாமிங்கு கூறாது விடுதல் முறையன்று. இலங்கையிலே தேகபலமுள்ள சாதியாரெனச் சொல்லப்படுகின்ற சிங்களருள் எவராயினும் ஸ்ரீ த. முத்துச்சாமிப்பிள்ளை யென்னும் நமது வாலிபர் செய்த அரிய செயல்போலொன்றைச் செய்தற்கு முன்வந்திலர். கொழும்பிற் பிரசுரமாகும் பத்திரிகைகளுள் "டெயிலி நியூஸ்" என்னும் பத்திரிகை ஸ்ரீ முத்துச்சாமிப்பிள்ளையைக்குறித்துக்கூறுமிடத்து (a budding Ramamurti) இளம் இராமமூர்த்தி யெனவும், "மார்ணிங் லீடர்" என்னும் பத்திரிகை (Local Sandow) உள்ளூர்ச் சான்டோ எனவும் வியந்து கூறியிருக்கின்றன. ஸ்ரீ முத்துச்சாமிப்பிள்ளை, பிரபல பிறக்றராயிருந்தவரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிர்வாக சபை அங்கத்தவருளொருவராகவும் அக்கல்லூரித் தனாதிகாரியாகவு மிருந்தவருமாகிய ஸ்ரீ சி. தம்பையாபிள்ளையவர்களின் இரண்டாம் புத்திரர். இவரது வயசு இருபதுக்கு மேற்படாது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்களுளொருவராகவும் விடுதிச்சாலை ஆசிரியராகவு மிவர் இருக்கின்றனர். இவர் செய்த பராக்கிரமச் செயலின்பொருட்டு இவருக்கு மெடல் கொடுக்கப்பட்டது.

பஞ்சத்தாலும் நவநாகரிகங்களைப் பின்பற்றியமையினாலும் நம்மவர்கள் தேகபலங் குன்றி, கீரை மரம் பிடுங்குவதற்கு ஏலப்பாட்டுப் பாடுகின்ற இக்காலத்தில இப்படிப்பட்ட பராக்கிரமம் படைத்த வாலிபர் எங்களுக்குளிருப்பது எமக்கெல்லாம் பெருமிதமன்றோ? யாழ்ப்பாணத்தில் இவரைப் போல இன்னுஞ் சில வாலிபர்கள் இப்படிப்பட்ட பராக்கிரமச் செயலைச் செய்துவருகின்றார்கள். ஆனால் இவ்வாலிபர்கள் "பறைச்சேரியில் உண்டான வில்வமரம்போல்" நம்மவர்களாற் பாராட்டப்படாதொழிவது மனவருத்தத்திற்கிட[illegible] இன்னும் இவ்வாலிபர் விஷயமாக மாய[illegible]க்கத்த விஷயமொன்றுளது. யாஞ் சொல்ல[illegible] செயல்களைச் இப்படிப்பட்ட பராக்கிரம[illegible] செய்யும் நமது வாலிபர்களெல்லோரும், சுத்தபோஜனிகள்; அதாவது மச்சமாமிசமருந்தாதவர்கள்; தாவர உணவையே உண்பவர்கள்; மதுபானத்தைக் கனவிலும் அருந்தாதவர்கள். இவர்களை முன்மாதிரியாகக்கொண்டு நமது பள்ளிக்கூட மாணவர்களும் தங்கள் தேகபலத்தை விருத்திசெய்ய முயலல் வேண்டும்.

ஈற்றில், இலங்கைச் சர்வகைத்தொழிற் காட்சியை அதிக சிரமத்துடன் ஆரம்பித்து இலங்கை வாசிகட்கு இப்பெரும் சீர்த்தியைத் தேடிவிட்ட டக்டர் ஜெயவர்த்தனரவர்கட்கும் அவருக்குத் துணையாக நின்று இதனை அனுகூலமாக்கிய மற்றும் அபிமானிகட்கும், அக்காட்சியைத் தொடங்கி உபசார வார்த்தைகள் சொல்லிய நமது தேசாதிபதியவர்கட்கும் இலங்கை வாசிகள் நன்றிகூறவேண்டும். மேலும் இடையிடையே இங்ஙனம் காட்சிகளை மாத்திரம் காட்டிவிட்டு வாளாவிராது இக்காட்சிகளிற் காட்டப்படும் கைத்தொழிற் பொருட்களும் பிறவும் இங்கு எக்காலத்திலும் விருத்தியாதற்கான வழிகளை இவர்கள் அனுசரிப்பார்களெனவும யாம் எதிர்பார்த்திருக்கின்றேம்.

சமாசாரம்.

நமது இளவரசர்:—சென்ற சனிக்கிழமை காலை சகலவரிசைகளுடனும் கொழும்பைவிட்டுப் பிரயாணமாயினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி:—இக் கல்லூரிப் புதுவருட விடுதலை நாளைத்தினந் தொடக்கம் ஒருமாசத்திற்கு விடுதலை செய்யப்படும்.

மருதடி விநாயகர் கோயில் மகோற்சவம்:—நாம் சென்றவாரப்பத்திரிகையிற் றெரிவித்தபடி சென்ற 15உ செவ்வாய்க்கிழமையன்று பிரஹ்ம ஸ்ரீ கு. செல்லத்துரைக் குருக்களவர்களால் துவஜாரோகணஞ் செய்யப்பட்டு உற்சவம் வெகுசிறப்பாக நடந்துவருகின்றது.

மகா சகஸ்திர சங்காபிஷேகம்:—நிகழும் துன்மதி௵ பங்குனி௴ ௧௮உ (1-4-22) சனிக்கிழமை சக்திகணபதி சதுர்த்தியாகிய விசேட புண்ணிய தினத்தில் பகல் 12 மணியளவில் இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையாருக்கு சகஸ்திர மகாசங்காபிஷேகமும் இரவு விசேட அலங்காரத் தண்டிகை உற்சவமும் மிக அலங்காரமாகவும் கிரமமாகவும் நடைபெறும்.

தேகவியோகம்.

அநுராசபுரம் கதிரேசன்கோவில்மானேசரும், ஜெனறல் கொன்றாக்றருமாகிய ஸ்ரீ சந்திரசேகர நடராசசிற்றம்பல மவர்களின் பாரியார் பஞனென்மணியம்மாள் இந்தப் பங்குனி௴ 26உ ஞாயிற்றுக்கிழமை இரவு 5½ மணியளவில் தேகவியோகமாயினர். இறக்கும்போது வயசு 29. இப்பெண்மணி தருமசிந்தையும் நற்குணமுமுள்ளவர். இம்மாதுசிரோன்மணி சுப்பிறீங்கோட் பிறக்றர் ஸ்ரீ வே. இராமசாமியவர்களதும், புங்குடுதீவு நொத்தாரிசு ஸ்ரீ வே. ஜெயப்பிரகாசமவர்களினதும், சேர்வயர் ஸ்ரீ வே. கார்த்திகேசரவர்களினதும் மருகியர். கடித.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

சுதேச கீதங்கள் (முதற்பாகம்):—இந்திய தேசாபிமானிகளுளொருவராக விளங்கியவரும் இந்தியா என்னும் பத்திரிகை ஆசிரியராகவிருந்தவரும், சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியராக இருந்தவரும், வரகவி என்று பாராட்டத் தக்கவருமாகிய (காலஞ்சென்ற) ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் காலந்தோறும் இந்தியாவின் பழைய சீர்த்திப் பிரவாகங்களைக் குறித்தும், இந்திய குறைமுறைகளைக் குறித்தும் அமிழ்தினுமினிய பல பாக்கள் பாடியுள்ளனர். அவருடையமனைவியாராகிய ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதியார் பாடிவைத்த பாக்களைப் பாகம் பாகமாக அச்சிட்டு வெளிப்படுத்திவருகின்றனர். ஸ்ரீமதி செல்லம்மாள் எழுதிய கடிதம் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அபிமானிகள் அக்கடிதத்தைப் பார்த்து அப்பாரத புத்திரிக்கு வேண்டிய உதவிசெய்வார்களாக. இச்சுதேச கீதங்கள் படிப்போர்க்கு இனிமையும், தேசாபிமானம் சாதியபிமானம் பாஷாபிமானம் என்னும் இவற்றையும் விருத்திசெய்யும் பான்மையன. பெரும்பான்மையான பாக்கள் நந்தன் சரித்திர வர்ணமெட்டிற் செல்லவே பாடப்பட்டுள்ளன. இந்திய தமிழபிமானிக ளெவரிடத்திலும் இப்பிரதி ஒவ்வொன்றிருத்தல் நன்றாகும். பிரதியொன்றன் விலை ரூபா 1. எமக்கனுப்பிய பிரதியை நன்றியறிதலுடன் ஏற்றும்.

இலங்கைக் கைத்தொழிற்காட்சி வடமாகாணப் பந்தர்.

வடமாகாணப்பொருட்காட்சிப்பந்தர் யாழ்ப்பாணத்து கைத்தொழிற்காட்சி நிர்வாக சபையாரால் மிக அழகுற இடப்பட்டிருக்கின்றது. இது பார்ப்பவர் கண்களைப் பெரிதுங் கவரும் பான்மையதாய் மதுரை முதலிய இடங்களிலிடப்படும் பந்தர்களின் மாதிரியைப் பின்பற்றி யமைக்கப்பட்டுள்ளதெனச் சொல்லலாம். வடமாகாணத்தாரின் விசேஷமான காட்சிப்பொருட்களாவன:- சாயப்புடைவை, யாழ்ப்பாணத்தில் நெசவுசெய்த புடைவைகள், புகையிலைச் சுருட்டு, பனையோலையாற் செய்யப்பட்ட பாய் பெட்டி கடகங்கள், பொன் வெள்ளி இரும்பு உருக்கு என்னுமிவைகளாற் செய்யப்பட்ட நூதன பொருட்கள், மரத்தாற்செய்யப்பட்ட பெட்டி முதலியனவாம். சாயப்புடைவைகள் மெழுகிட்டும் மெழுகிடாமலும் சாயமிடப்பட்டன. திறமான எழுத்துவேட்டியொன்று காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணச் சுருட்டு மிக்க பேருடையது. 1904-ம் ஆண்டு இவ்வகையான ஒரு பொருட்காட்சியில் யாழ்ப்பாணச் சுருட்டிற்கு ஒரு தங்க மெடல் கொடுக்கப்பட்டது. சுத்தமாகக் காய்ச்சியும் ஊற்றியும் எடுக்கப்பட்ட [illegible]லெண்ணெய் தேக்க

யெண்ணெய், இருப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் என்று பிலவைகளும் இப்பந்தரில் வைக்கப்பட்டிருந்தன. தங்கத்தாற் செய்யப்பெற்ற காப்புகளும் சங்கிலிகளும் மற்றும் நகாசுவேலை செய்யப்பட்ட ஆபரணங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மிகவும் நுட்பமாகச் செய்யப்பட்ட ஒரு சப்பரமும் வைக்கப்பட்டிருந்தது. பித்தளையாற் செய்யப்பட்ட பாத்திரங்களும் விக்கிரகங்களும் நுட்பமான பூட்டுகளும், இருப்பு மண்வெட்டிகளும் கத்திகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. குதிரைவண்டிகள், மாட்டுவண்டிகள், இழுவைவண்டிகள், பொல்லுகள், சிறு கப்பல்கள் முதலிய மரவேலைகளும் நுட்பமாகச் செய்து வைக்கப்பட்டிருந்தன. சிவியாதெருவில் விளைவிக்கப்பட்ட உப்பும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இவை மாத்திரமன்றி யாழ்ப்பாணப் பந்தரில் ஏனைய பந்தர்களில் நிகழாத விசேஷமான செயலொன்று நிகழ்ந்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்களுளொருவரும், பிறக்டராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ சி. தம்பையாபிள்ளையவர்களின் புதல்வருமாகிய ஸ்ரீ முத்துச்சுவாமிப்பிள்ளையவர்கள், கனத்த இருப்புச்சங்கிலியை முரித்தல், தமது மார்பிற் பாரிய கல்லை வைத்து உடைப்பித்தல், மாட்டுவண்டியைத் தமது மார்பின்மீது ஊரச்செய்தல், முதலிய அரிய பராக்கிரமச் செயல்களைச் செய்தனர். இவர் செயல்களைக் கண்டு ஆங்கு வந்தோரனைவரும் அற்புதமடைந்தனர். தங்கள் சிரமத்தையும் அரிய நேரத்தையும் பொருட்படுத்தாது வடமாகாணப் பொருட்காட்சியை விசேஷ அனுகூலமுறச்செய்து வடமாகாண வாசிகட்குப் பெரும் புகழைத் தேடிவிட்ட யாழ்ப்பாண மணியம் ஸ்ரீ முதலியார் வ. மு. முத்துக்குமாரு அவர்கட்கும், வலிகாம மணியம் மிஸ்டர் J. N. சந்திரசேகரமவர்கட்கும், தீவுப்பற்று மணியம் ஸ்ரீ மு. சோமசுந்தரமவர்கட்கும் யாழ்ப்பாண வாசிகளாகிய யாம் பெரிதுங் கடமைப்பட்டுள்ளோம்.

இந்திய சமாசாரம்.

மகாத்மா காந்தியவர்கள் விடுத்த நிருபம்.

“நான் குற்றவாளியெனக் கூறியதற்குக் காரணம்.”

“இந்திய சனங்கட்கும் இங்கிலாந்திலுள்ள சனங்கட்கும், கடுமையான அரசபக்தியுள்ளவனாகவும், ஒத்துழைப்பவனாகவுமிருந்தமையால், பின்னர் அரசினருக்கு மாறாகவும் ஒத்துழையாதவனாகவும் வந்தகாரண மென்னவென்பதைச் சொல்லுகின்றேன். இந்தியாவில் நியாயத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கத்திற்கு மாறாக விரோதங்களுண்டாக்கினேனென்னுங் குற்றச்சாட்டிற்கு யான் ஏன் குற்றவாளியெனக் கூறினேனென்பதைக் கோட்டாருக்கு யான் விளக்கப்படுத்துகிறேன்.

1893-ம் ஆ தென்னாபிரிக்காவிலே, அமைதியீனமிருக்குஞ் சமையத்திலேயே முதன்முதல் யானும் அரசியல் விஷயங்களிற் பிரவேசித்தேன். முதன்முதல் அத்தேசத்தில் ஆங்கிலருக்கும் எனக்குமிடையே நிகழ்ந்த விவகாரங்கள் அவ்வளவு சந்தோஷமானவையல்ல. யான் மனுஷனாயிருந்தாலும் இந்தியனானபடியினால் அங்கு எனக்கு ஒருவகையான சுதந்தரங்களுமில்லையென்பதையுணர்ந்தேன். ஆனால் இதனால் யான் மனத்தைரியமிழக்கப்படவில்லை. யானும் அரசினருடன் சேர்ந்து அங்குள்ள குறைகளைத் திருத்த முயன்றேன். அந்த அரசியல்முறையை முற்றாக அழித்துவிடல் வேண்டுமென்ற எண்ணம் எனக்கிருக்கவில்லை. 1899-ம் ஆ போவர் யுத்தமுண்டாகி ஆங்கில சக்கராதிபத்தியமே சஞ்சலத்தி லிருந்தபோது, யானும் அரசினருடன் சேர்ந்து ஒரு சைனியத்தைச் சேர்த்து பல யுத்தங்களைச் செய்து லேடிஸிமித் என்னுமிடத்தை மீட்பதிலும் உதவியாக நின்றேன். 1906-ம் ஆண்டு சூலு என்னுஞ் சாதியார் கலகஞ்செய்தபோது அக்கலகம் முடியுமட்டும் நம்மவருடன் துணைசெய்தேன். இந்த இரண்டு சமையங்களிலும் எனக்கு மெடல்களும் உதவப்பட்டன. தென்னாபிரிக்காவில் யான்செய்த செயல்களின் பொருட்டு லார்ட் ஹேஸ்ரிட்ஸ் அவர்களும் எனக்கு ஒரு மெடல் உதவியிருக்கின்றார். 1914-ம் ஆண்டு ஆங்கிலருக்கும் ஜர்மனியருக்கு மிடையே யுத்தமுண்டபோது, லண்டன் நகரிலுள்ள இந்திய மாணவர்களைச்சேர்த்து ஒருசைனியமாக்கினேன். அச்சைனியஞ் செய்த உதவிகளை அதிகாரிகளும் மெச்சியுள்ளனர். 1917-ம் ஆ டெல்ஹியில் லார்ட் செம்ஸ்வோர்ட் இந்தியாவிலுள்ள சனங்களிற் பலரைச் சைனியத்திற் சேர்க்க முயன்றபோது, அக்காலத்திற் சுகவீனமாகவிருந்த யான் என் சுகவீனத்தையும் பொருட்படுத்தாது, ஒருசைனியஞ் சேர்த்தேன். இதற்கிடையில் ஆங்கில ஜர்மனிய யுத்தம் நின்றுவிட்டது. சைனியந் தேவையில்லையெனவுந் தெரிவிக்கப்பட்டது.

எனது தேசத்தவர்களுக்கும் மற்றுஞ் சாதியார்களைப்போலச் சமாதானமான சுதந்தரங்களைப் பெறலாமென்னும் நோக்கத்துடனேயே யான் இவற்றைச்செய்துவந்தேன். முதன்முதல் றவ்லற் பிரமாணம் இந்தியர்கட்குப் பெருந் துன்பத்தை விளைத்தது. இது இந்தியருடைய சுவாதீனமனைத்தையும் அபகரித்துவிட்டது. இந்தப் பிரமாணத்திற்கு மாறாக யான் உழைக்கவேண்டுமெனப் பிரவேசித்தேன். இதன்பின் பாஞ்சாலத்துப் பெருவதை நிகழ்ந்தது. இதில் அதிகாரிகள் சனங்களை (மாடுகள்போலத்) தவழ்ந்து செல்லச் செய்தார்கள். பலசன சமூகத்திற் சனங்களை நிறுத்தி அடித்தார்கள். இன்னும் பல சித்திர வதைகள் செய்தார்கள். துருக்கி விஷயமாகவும், இஸ்லாமானவர்களின் புண்ணிய க்ஷேத்திரமாகிய பலஸ்தையின் விஷயமாகவும் யுத்தநிறுத்தியகாலத்தில் ஆங்கில மந்திரி சொன்ன வாக்குகளொன்றும் நிறைவேற்றப்படவில்லையென்பதையும் நான் அறிந்தேன். 1919-ஆ அமிர்தசரசிற் கூடிய இந்திய மகாஜன சபையில் எனது நண்பர்கள் தடுப்பவும், என்னை எச்சரிக்கை செய்யவும் அவற்றைப் பொருட்படுத்தாமல், நான் மொன்ரேகு-செம்ஸ்வோர்ட் திருத்தங்கள் பொருட்டு அரசினருடன் சேர்ந்து உழைக்கும்படி நின்றேன். இந்திய இஸ்லாமானவர்கள் குறைகளையும், பாஞ்சாலத்தில் நேர்ந்த குறைகளையும் ஆங்கில மந்திரி நிவர்த்திசெய்யாரென்றும் எமக்கு உதவப்பட்ட சலாக்கியங்கள் பூரணமற்றனவாயினும், இந்தியாவிற்குக் காலகதியிற் சலாக்கியங்கள் கிடைக்குமென்றும் எண்ணியே இப்படிச் செய்தேன். ஆனால் எனது நம்பிக்கையெல்லாம் வியர்த்தமாயின. கிலாபத் விஷயமாகச் சொன்ன வாக்குத்தத்தங்களொன்றுமினும் நிறைவேற்றப்பட்டில. பாஞ்சாலத்தில் நிகழ்ந்த குறைகளும் அலட்சியஞ் செய்யப்பட்டன. அங்குக் குற்றஞ்செய்த அதிகாரிகள் தண்டிக்கப்படாதொழிந்தமை மாத்திரமன்றி, அவர்கள் பின்னரும் உத்தியோகத்தில் வைத்திருக்கப்பட்டார்கள். சிலர் உபகாரவேதனம் பெற்றுவருகின்றார்கள். இந்தியாவிற்கு உதவப்பட்ட திருத்தங்களெண்ணிலோ, சனங்கட்கு நன்மை பயப்பதை யொழிந்து, இந்தியாவிலுள்ள பணத்தை வாரிக்கொண்டு போதற்கும் இந்தியர்களை எந்தநாளும் அடிமைத்திறத்தில் வைத்தற்கும் ஏதுவுள்ளனவென்பதை யானுணர்ந்தேன். பிருத்தானியரின் தொடர்பினால் இந்தியா முன்னிருந்ததிலும்பார்க்க அதிக ஏழைமையடைந்துவிட்டதென்பதை யுணர்ந்தபோது எனக்குப் பெரும் வெறுப்பு உண்டாயது. இந்தியர்கள் தாம்படும் கஷ்டத்திற்கு மாறாக ஆயுதமெடுப்பதென்றால் அதற்கு அவர்களிடத்திற்சக்தியில்லை. மற்றும் ராச்சியங்கட்குரிய சுவதந்திரங்களை இந்தியா பெறுவதற்கு இன்னும் பல தலைமுறைகாலஞ் செல்லும். பஞ்சாலத்தில் சிறிதேனும் நின்றுபிடிக்க இயலாத அவ்வளவு ஈனஸ்திதிக்கு இந்தியா வந்துவிட்டது. ஆங்கிலர் இந்தியாவிற்கு வரமுன்னர் இந்தியாவிலுள்ள இலட்சக்கணக்கான சனங்கள் நூல்நூற்றல், சீலைநெசவுசெய்தல், முதலிய தொழில்களை நன்கு செய்து வந்தார்கள். கமத்தொழிலையும் விருத்திபண்ணி வந்தார்கள். குடிசைகடோறுஞ் செய்யப்பட்டுவந்த இந்த விசேஷமான முயற்சிகள் ஐரோப்பியரால் அழிக்கப்பட்டன. பசியால் வருடந்தோறும் இந்தியாவிற் பலர் காட்டுப்புறங்களில் வருந்தி ஈற்றில் இறந்துபோகின்றனரென்பது பட்டினவாசிகட்குத் தெரியாது. இந்திய ஏழைத்தொழிலாளிகளின் அற்பலாபந்தானும் அந்நியரால் கவரப்படுகின்றனவென்பதையும் நகரவாசிகள் அறியார்கள். பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள சனங்களின் தொழில்முயற்சியால் வரும் லாபமனைத்தும் பிறரால் கவரப்படுதற்கான அரசியல் முறை நடைபெறுகின்றதென்பதையும் அவர்கள் அறியார்கள். கிராமங்களில் வசிக்கும் ஏழை இந்தியர்கள் ஏன் கங்காளரூபமாகக் காணப்படுகின்றார்கள் என்பதற்குக் காரணங் கூறுவாரெவருமில்லை. இந்திய சனங்களிருக்கும் இப் பரிதாபமான நிலைக்குச் சமாதானஞ் சொல்லவேண்டியவர்கள் இந்திய பட்டின வாசிகளும் இங்கிலாந்திலுள்ளவர்களுமேயாவர்.

இந்தியாவிலுள்ள நியாயப்பிரமாணங்களும் அந்நியருக்கே சகாயமாயுள்ளன. பாஞ்சாலத்தில் அனுசரிக்கப்பட்ட யுத்தகாலச்சட்ட (Martial-Law) வியாச்சியங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்துபேர்வீதம் குற்றவாளிகளெனக் காணப்பட்டார்கள். இந்திய அரசியல் விஷயங்களைநோக்குமிடத்தில் பத்துப் பேருக்கு ஒன்பதுபேர்வீதம் நிரபராதிகள் அபராதிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். அவர்கள் செய்த குற்றமென்னவென்றால் தங்கள் தேசத்தின்மீது அபிமானம் பாராட்டியமையேயாம். இந்திய நீதிஸ்தலங்களில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்குமிடையில் வியாச்சியங்கள் நேர்ந்தகாலத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விகிதம் இந்தியர்கட்கு நீதிசெய்யப்படாதொழிந்தது. இது புழுகெனநினைக்கவொண்ணாது. இப்படிப்பட்ட வியாச்சியங்களிற் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு இந்தியரும் இதனை அனுபவத்திற் கண்டனர். இராச்சிய பரிபாலனத்திற் சம்பந்தப்பட்டிருக்கும் ஆங்கிலரும் இந்தியரும் தாங்கள் இப்படிப்பட்ட குற்றத்தைச் செய்கின்றார்களென்பதைச் சிறிதும் உணராதிருத்தலே மிகப் பிரமாதமான காரியம். அவர்கள் தாங்கள் நீதியான பரிபாலனஞ் செய்துவருவதாகவும், இந்தியா அவ்விஷயத்தில் மெல்ல மெல்லத் திருத்தமடைந்து வருகின்றதெனவும் எண்ணியிருக்கிறார்கள். சனங்களை ஒருவாற்றானும் எதிர்க்கமுடியாதவர்களாக்குதற்குத் தாங்கள் கடுமையான அடக்குமுறைகளை உபயோகித்துவருகின்றார்களென்பதை இவர்கள் சிறிதுஞ் சிந்திப்பதில்லை. இந்தப் பயங்கரமான வழக்கமே பரிபாலனத்தைப் பங்கப்படுத்திவிட்டது.

இந்தியன் பீனல்கோட்டு 124A பிரிவுப் பிரமாணம் (அதாவது என்னைக் குற்றப்படுத்துவதற்கு இப்பொழுது உபயோகிக்கப்பட்ட பிரமாணம்) எல்லாப் பிரமாணங்களுள்ளுங் கடுமையானது. இதுவே பிரஜைகளின் சுவதந்திரத்தை அடக்குதற்கு உபயோகிக்கப்படுகின்றது. அன்பை நியாயப்பிரமாணங்களால் விருத்திசெய்தல் முடியாது. ஒருவனுக்கு இன்னொருவனிடத்திலே அன்பேனும் இன்னொரு பொருளிலே அன்பில்லாவிட்டால் அந்த அன்பில்லாமைக்குக் காரணத்தை விளக்குதற்கு அவனுக்கு இடங்கொடுக்கவேண்டும். ஸ்ரீ பங்கருக்கும் எனக்கும் உபயோகிக்கப்பட்ட இப்பிரமாணத்தின்படி அரசினரிடத்தில் அன்பில்லாமையே குற்றமாகும். இந்தப் பிரமாணத்தின்படி விளங்கித் தீர்க்கப்பட்ட சில வியாச்சியங்களை நான் படித்துள்ளேன். எமது நாட்டிலுள்ள பெருந் தேசாபிமானிகள் சிலர் இப்பிரமாணத்தின்படி விளங்கி அபராதம் விதிக்கப்பெற்றனர். அதனாலேயே எங்கள் இருவர் விஷயத்திலும் இப்பிரமாணம் உபயோகிக்கப்பட்டமையைப்பற்றி யான் சந்தோஷமுறலானேன், யான் அதிகாரிகள்மீது துவேஷங் கொண்டிருந்ததற்குக் காரணத்தை இயன்றவரையிற் சுருக்கிக் கூறினேன். தனியே எந்த உத்தியோகத்தனிடத்திலும் எனக்குத் துவேஷமில்லை. நமது அரசரிடத்தில் எனக்கு ஒருவகையான குரோதமுமில்லை. ஆனால் இந்தியாவிற் முன்னொருகாலத்திலுமில்லாத நிலைமைக்குக் காரணமாயுள்ள இப்பரிபாலனத்தின் மேலேயே எனக்கு அதிக வெறுப்புண்டு. இப்பரிபாலனத்தில் நம்பிக்கை வைத்திருப்பதும் பாவம்.

ஒத்துழையாமை முறையை அனுசரிப்பதினாலே இந்தியர்கட்கும் இங்கிலாந்திலுள்ளவர்கட்கும் எங்களுடைய பரிதாபமான நிலைமையைக் காட்டிவிட்டேன். முரட்டுத்தனத்தோடு கூடிய ஒத்துழையாமை நிலைபெறாது நன்மை பயக்கமாட்டாதென்பதை நான் எம்மவர்கட்குக் காட்டுகின்றேன்.

கோட்டாருக்கு முறையீடு.

ஆனமையினாலே கோட்டாராகிய நீங்கள் விதிக்கக்கூடிய கடுமையான தண்டனையையான மிக்க மனமகிழ்ச்சியோடும் ஏற்கச் சித்தமாயிருக்கின்றேன். ஏனென்றால் குடியானவன் தான் செய்த பெரிய குற்றத்திற்காக நியாயத்தின்படி என்ன தண்டனை விதிக்கப்படுகின்றதோ அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். நீதிபதியும் மற்றும் நீதி சொல்பவருமாகிய நீங்கள், நீங்கள் உபயோகிக்கும் பிரமாணம் முறையற்றதெனவும், நான் உண்மையில் நிரபராதியெனவுங் கண்டால் நீங்களும் உங்கள் உத்தியோகங்களின் நின்றும் விலகிக்கொள்ளல்வேண்டும். அஃதன்றி நீங்கள் அனுசரிக்கும் பிரமாணம் சனங்களின் நன்மைக்குரியதெனவும், எனது முயற்சிகளெல்லாம் சனங்களின் நன்மைக்கு மாறானதெனவும் கண்டால் நீங்கள் விதிக்கக்கூடிய கடுந் தண்டனையை எனக்கு விதித்தல்வேண்டும்.”

கடிதம்.

அங்கும் இங்கும்.

ஆரியகுளத்து வாலிபரது முயற்சி மிகவும் வியக்கத்தக்கது. சுருட்டுவேலைக்காரரும் மற்றவர்களும் சேர்ந்து ஒருவீடு வாடகைக்கு எடுத்து தினமும் ஓர் வாலிபசங்கக் கூட்டம் கூடுகிறார்கள். சுக்கிரவாரந்தோறும் பிரசங்கமாவது பஜனையாவது நடைபெற்றுவருகின்றது. சில வாரங்களுக்குமுன் இச்சபையின் அங்கத்தவரானோர் சமயப்பிரவேசமுஞ்செய்து கிரமமாய்ச் சந்தியாவந்தனஞ் செய்துவருகிறார்களாம். இன்னும் அயலவர் அலட்சியத்தாற் சிதைந்த விநாயகர்கோயிலொன்றை திருத்தி நித்தியபூசைக்கு ஒழுங்கு செய்தற்கு ஊக்கம் கொண்டிருக்கிறார்கள். இச்சபைக்குப் போனவரொருவருள்ளத்தையும் கவரக்கூடிய சாந்தமும் அன்புமுள்ள சிவபக்தர்களாக அவர்க ளிருப்பது எல்லோருக்கும் சிறப்பைக்கொடுக்கும் இச்சபையின் முயற்சி குறையாது என்றும் மேல்நோக்கிப்பரந்து வளர்ந்து பிரகாசிக்கவேண்டுமென்றே பிரார்த்திக்கிறோம்.

இன்னும் இப்படியே சங்கங்கள் ஆங்காங்கு கூடித் தத்தம் கிராமத்துக் குறைநிறைகளைக் கவனிப்பதும் எங்கள் வாலிபருடைய திருத்தத்துக்காக வேண்டிய பிரசங்கங்கள், இராப்பள்ளிக் கூடங்கள் வாசகசாலைகள் ஏற்படுத்துவதும் இதை வாசிப்பவர்களது பெருங்கடன். இன்னும் தாமதமாயின் எங்கள் நாகரிகமும் பெருமையும் சமயமும் காலகதியில் அழிந்துவிடுமென்பதற்கு ஐயமே இல்லை. ஆங்கிலங் கற்றவர்களிலும் “கல்லாதபேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்” என்ற ஆன்றோர் வாக்கின்படி தமிழ்க்கல்விகற்றவர்களே எங்கள் தேயத்தைச் சிறையினின்றும் நீக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆங்கில நாகரிகத்தைக் கைக்கொண்டவர்கள் ‘தாம் பிடித்த முயலுக்கு மூன்றுகா’ லென்பார்போலத் தாங்கள் கொண்டகோலத்தாற் சென்மசாபல்லியமாய் விடுமெனறே தாபிக்க விளைவர். எங்கும் சபைகள் கூடிச் சனங்களுடைய குறைநிறைகளைப் பேசுவது தான் இந்த சுயராச்சியத்துக்கு வழி.

கரம்பன் பள்ளிக்கூடம் மிகவும் நல்லநிலையை அடைந்துவிட்டது. இன்னும் உபாத்தியாயர்கட்கு கொடுப்பதற்குப் பணம் தேவை. கட்டடம்முடிந்துவிட்டது எவரும்பார்க்கலாம். தேசாபிமானத்தால் எவ்வளவு செய்துமுடிக்கலாம் என்பதைச் சைவர்களனைவரும்படி இப் பள்ளிக்கூடம் நடைபெறுகிறது. இப்பள்ளிக்கூடத்திற்கு உதவிசெய்பவர்களுக்குப் பெரும் புண்ணியம் இட்டசித்திகளுங்கிடைக்கும்.

மத்தியசபைக்கு எவ்வித உதவியைக் கேட்டாலும் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். ஒருவரும் இன்னும் உதவிசெய்யும்படி கேட்கிறார்களில்லை என்பதே இச்சபையாரின் [எச்சபை? ப—ர்.] வருத்தம். பிரசாரகரோ பணமோ, வேறு எவ்வித உதவியோ செய்வதற்கு என்றும் தயாராயிருப்பதை மறக்கவேண்டாம்.

இரத்தினபுரிச் சபையார் தங்கள் சபையின் ஆலோசனைக்கூட்டத்தாரில் ஒருவராக அடியேனை நியமித்துக் காகிதம் எழுதினார்கள். இவ்வளவு தூரத்திலிருந்து எவ்வித உதவி செய்வேன். அன்பினாலாவதென்னில் அவர்கள் பாதாரவிந்தத்துக்கே ஒப்புவித்தேன். எப்பொழுது தங்கள் ஊருக்கு வரவேண்டுமெனக் கேட்டாலும் ஆயத்தமாயிருக்கிறேன். எமது நண்பரும் ஆயத்தம் ஆகையால் தங்கள் தங்கள் ஊரிலிருப்பவர்களையே நிருவாகசபையாருக்குச் சேர்த்துக் கொள்வது நியாயமாகும். இரத்தினபுரியில் ஓர் கோயில் கட்ட வேண்டுமென்று மிகுந்த பிரயாசமெடுக்கும் அங்கத்தவர்களுக்கு எங்கள் அன்பைச் செலுத்துகிறோம்.

நாவலப்பிட்டிச்சபையார் பள்ளிக்கூடமொன்று தாபிப்பதில் மிக முயற்சி செய்கிறார்கள். இதை எல்லோரும் அங்கீகாரம் செய்வீர்களென்று நம்பியிருக்கிறேன்.

இங்ஙனம்,
மா. ச. இ.

காலஞ்சென்ற ஸ்ரீ பாரதியார் மனைவியின் கடிதம்.

தேசாபிமானப்பெருங்கவியான எனது அரிய கணவரின் அகால மரணத்தைக் குறித்து எனக்குப் பலவழிகளில் அநுதாபங் காட்டிய என்னிறந்த நண்பர்களுக்கும், பல சங்கத்தார்களுக்கும், சபையோர்களுக்கும் என் மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவிக்கிறேன்.

பாரதியார் எனக்கும் தமிழ்நாட்டிற்கும் பெரிய ஆஸ்தியாக வைத்துவிட்டுப் போயிருப்பது அவரது அரிய பாடல்களும் வசன காவியங்களுமேயாம். இதுவரை வெளியான அவரது நூல்கள் மிகவுஞ்சொற்பமானவை. அவை ஸ்வதேச கீதங்கள் - ஜன்ம பூமி - நாட்டுப் பாட்டு - கண்ணன் பாட்டு - ஞானரதம் - முதலியசில சிறிய நூல்களே. புதுச்சேரியில் நாங்கள் இருந்த 10வருஷ காலத்திலும், அதன்பின் அவருடைய மரணகால வரையிலும் அவர் எழுதிவைத்திருக்கும் நூல்கள் அதிகம். “நாட்டுப் பாட்டு”என்ற ஒரு பகுதி மாத்திரம் 200 பக்கங்கொண்ட ஒரு புத்தகமாகும். “பாஞ்சாலி சபதம்” முதற் பாகம் மாத்திரம் முன் வெளிவந்தது. இரண்டாம் பாகம்முழுவதும் எழுதிமுடித்து வைத்திருக்கிறார் சக்திப்பாட்டு-வேள்விப்பாட்டு - அந்திப்பொழுது முதலியனவும் - பக்தி 66 - கபிலர் அகவல் - குயில் என்ற காவியம் - நான்மணிமாலை - வேதப்பொருள் அல்லது காட்சி - பகவத்கீதை, பதஞ்சலி யோகசூத்ரம், சந்திரிகையின் கதை, ஜகத் சித்ரம் என்ற ஒரு சிறு நாடகம் முதலியனவும். ஆங்கிலம் வங்காளி முதலிய பாஷைகளிலிருந்து மொழிபெயர்த்தெழுதின நூல்களும், பத்திரிகைகளில் வெளிவந்த கதைகளும் வியாசங்களும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அச்சிட்டு வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகளை நானும் எனது நண்பர்களும் செய்துவருகின்றோம்.

என்னிடமிருந்து ஸ்ரீ பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகளையும் அச்சுரிமைகளையும், விலைக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று தேசபக்திமிகுதியுள்ள சிலநண்பர்கள் என்னைக்கேட்டார்கள். இதுவரையும் அநுபவித்த கஷ்டங்கள் நீங்கி நானும் என் குழந்தைகளும் சுகமாக ஜீவனஞ் செய்யும்படியான ஏற்பாடுகளையுஞ் செய்வதாகச் சொன்னார்கள். ஸ்ரீ பாரதியாருடைய கவித்திறமையையும், தேசபக்தியையும் நம் தாய்நாடு முன்னேற்ற மடையவேண்டுமென்று அவர் கொண்டிருந்த அவாவையும், அதற்காக அவர்செய்த யோசனைகளையும் நான் நன்கறிவேனாதலால், தமிழ்நாட்டில் அவருடைய பெயரும், கீர்த்தியும் என்றென்றும் நிலைநிற்கச் செய்யவேண்டுமென்றும், அவருடைய அரிய நூல்களெல்லாம் தமிழ்நாட்டெங்கும் பரவி, தமிழ்நாடு முன்னேற்றமடையவேண்டுமென்றுமெண்ணம் எனக்கும்அதிகமிருப்பதால் நான் ஸ்ரீ பாரதியாருக்குச் செய்யவேண்டிய கடமையை வேறுயாரும் சரிவரச் செய்யமாட்டார்களென்று பயந்து, என்னுடன்பிறந்தவரைக்கொண்டே இந்தக் கடமையைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தேன். இது நிற்க, தமிழ்நாட்டுக்காங்கிரஸ் கமிட்டி என் சம்ரக்ஷணைக்காக, ரூபா 1000 நன்கொடை யளித்திருப்பதாகக் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்தேன். இந்த ரூபாய் ஆயிரத்தில் ஒருபாகத்தை ஸ்ரீ பாரதியாரின் நூல்களை அச்சிடுவதற்குச் செலவு செய்வதாகத் தீர்மானித்துள்ளேன்.

ஸ்ரீ பாரதியாரின் ஞாபகார்த்தமாக, அவருடைய நூல்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, சேர்த்தியான புஸ்தகங்களாக, உயர்ந்தகடுதாசியில் அச்சிட்டு, ஸ்ரீ பாரதியாரின் படத்துடனும், சுருக்கமான ஜீவிய சரித்திரத்துடனும் 300பக்கங்கொண்ட புஸ்தகமாக 4புஸ்தகங்கள் வெளியிடவேண்டுமென்பது என் விருப்பம்.

ஸ்ரீ பாரதியார் ஆசைகொண்டுள்ள காரியம் மற்றொன்று அவருடைய கீதங்களையும், இதர நூல்களையும், சிறுபகுதிகளாகப் பிரித்து, ஆயிரக்கணக்காக அச்சிட்டுத் தமிழ்நாடுமுற்றிலும் பரவச்செய்யவேண்டு மென்பதுவே. என்றுமியன்றவரை இக்கடமையையுஞ்செய்கிறேன்.

ஸ்ரீ பாரதியாரின் ஆப்த நண்பரும் பால்யகாலமுதல் அதிக அபிமானம் பாராட்டி வந்தவருமான தூத்துக்குடி வக்கீல் ஸ்ரீமான் சோமசுந்தரபாரதி (எம். ஏ; பீ. எல்.) ஸ்ரீ பாரதியாரின் ஜீவிய சரித்திரம் எழுதிவருகிறார். அவருடைய உதவிக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

கையெழுத்துப் பிரதிகளை அச்சுக்குக் கொடுத்துவிட்டேன். கூடியசீக்கிரம் புத்தகங்களை வெளிவரச்செய்யவேண்டியது தமிழ்நாட்டின் பொறுப்பு. இந்த முயற்சியில் எனக்குப் பொருள் உதவி புரிவதாகச் சில நண்பர்கள் முன்வந்திருக்கிறார்கள். அங்ஙனமே சில இடங்களில், கமிட்டிகளும் ஏற்பட்டிருப்பதாகவும்அறிகிறேன். இவ்விஷயத்தில் எனக்கு உதவிசெய்ய விரும்புவோரெல்லாம், தங்கள் உதவியை அடியிற் கண்ட எனது விலாசத்திற்கு, தாமதமின்றி அநுப்பவேண்டுகிறேன். உதவிசெய்யமுடியாதவர்களும்தங்களால்இயன்ற விதமாக ஆதரவையேனும்அநுப்பினால் புஸ்தகங்கள் வெளியானவுடன் அந்தந்தத் தொகைக்குரிய புஸ்தகங்களை அநுப்பச் சித்தமாயிருக்கிறேன். எனக்கு எவ்வளவு சிறிய உதவி செய்பவர்களும், எனது குடும்பத்திற்கு மட்டுமன்றித் தமிழ்நாட்டிற்குப் புத்துயிர் அளிக்கக்கூடிய ஸ்ரீ பாரதியாரின் அரிய பாடல்களும் பிறவும் உலகத்தில் வெளிவரச் செய்யும்பெருமுயற்சிக்குத் துணைபுரிபவர்களுமாவார்கள். வந்தே மாதரம்.

செல்லம்மாள்,
2/186, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,

யாழ்ப்பாணம்
ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்க
பரீக்ஷாவிதிகள். (1923)

o

1. இச் சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் பரீக்ஷைகள் பிரவேசபரீக்ஷை, பாலபண்டிதபரீக்ஷை, பண்டிதபரீக்ஷை என மூவகைப்படும். பரீக்ஷார்த்திகள் தனித் தமிழிலாயினும், தனியே ஸம்ஸ்கிருதத்திலாயினும் இருபாஷைகளிலுமாயினும் வேண்டியபடி பரீக்ஷிக்கப்படுவர்.

2. ஷை பரீக்ஷைகளில் கீழ்ப்பரீக்ஷை தேறியே மேற்பரீக்ஷைக்கு வரவேண்டும் என்னும் நியதியில்லை.

3. இப்பரீக்ஷைகள் அடியிற் காட்டியிருக்கிற விவரப்படி யாழ்ப்பாணத்தில் துந்துபிஞூ பங்குனிமீ 20, 21, 22உ (1923 ஏப்ரல்மீ 2, 3, 4 உ திங்கள், செவ்வாய், புதன்கிழமை)களில் நடைபெறும்.

4. ஷை பரீக்ஷைகளுக்குப்போகவிரும்புவோர் துந்துபிஞூ தைமீ 20உ (2-2 23) க்குப் பிந்தாமல் இச் சங்கத்தின் காரியதரிசிக்கு உரிய மாதிரிப் பத்திரத்தில் விண்ணப்பித்துக்கொள்ளக்கடவர். மாதிரிப்பத்திரம் காரியதரிசியிடம் பெறலாம்.

பாடசாலைமாணாக்கரல்லாத ஏனைய பரீக்ஷார்த்திகள் ஒவ்வொருவரும் ஒரு ரூபா கட்டணம் செலுத்தற்பாலர். இத்தொகையைக் காரியதரிசிக்கு விண்ணப்பத்துடன் மணிஆர்டர் அல்லது போஸ்றல்ஆர்டர்மூலமாக அனுப்புக.

5. பாடவகைகள் (I, II, III என்னும்) முதல் மூன்றிலும், IV-ம் பாடவகையில் குறைந்தபட்சம் ஏதும் ஒரு பிரிவிலும் சித்திபெறும் மாணவரே முழுப்பரீக்ஷையிலும் சித்திபெற்றவராவர்.

6. இப் பரீக்ஷைகளில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 100-க்கு 25-க்குக் குறையாமலும், ஒவ்வொரு பாடவகையிலும் 100-க்கு 33 வீதத்துக்குக் குறையாமலும் அம்ஸம்பெற்று; பூரணம்ஸ மொத்தத்தில் 100-க்கு 60 வீதத்துக்குக்குறையாமல் அம்ஸம் பெறுவோர் முதல் வகுப்பினராகவும், 50 வீதத்துக்குக் குறையாமல் அம்ஸம் பெறுவோர் இரண்டாம் வகுப்பினராகவும், 40 வீதத்துக்குக் குறையாமல் அம்ஸம் பெறும் மாணவர் மூன்றும் வகுப்பினராகவும் தேர்ச்சி பெற்றவராவர்.

ஷை பரீக்ஷைகளுக்குரிய பாடங்கள் வருமாறு:—

(A) பிரவேச பரீக்ஷை.

தமிழ்.

வகை. I. இலக்கியம் 250 அம்ஸம்.
1. { தண்டலையார்சதகம்
   { காலடியார் 50 செய்யுள்
2. கலைசைச்சிலேடைவெண்பா
3. மறைசையந்தாதி
4. வில்லி பாரதம் 1-ம் பருவம்
5. பெரியபுராணவசனம்.

வகை II இலக்கணம் 150 அம்ஸம்.
1. நன்னூற்காண்டிகைஉரை முழுதும் (நாவலர்).

வகை III. 100 அம்ஸம்.
வியாசமெழுதல்.

வகை. IV. 50 அம்ஸம்.
(a) யாழ்ப்பாணச்சரித்திரம்
(b) விசாகப்பெருமாளையர் யாப்பணியிலக்கணம்
(c) சூடாமணிநிகண்டு முதல் 4 தொகுதி.

ஸம்ஸ்கிருதம்.

வகை. I. காவ்யம் 250 அம்ஸம்.
1. ரகுவம்ஸம் 4 சர்க்கம்
2. ஹிதோபதேசம் முதல் 2 பிரிவு.

வகை. II. வியாகரணம் 150 அம்ஸம்.
1. மந்திராந்தப்பிரவேசிகா
2 லகுகௌமுதி சப்தம் முடிய.

வகை. III. 100 அம்ஸம்.
(a) மொழிபெயர்த்தல்
(b) பிரத்தியுத்பாதனம்
(c) சொல்வதெழுதல்.

வகை. IV.
(a) அமரம் முதலாம்காண்டம்.

(B) பாலபண்டித பரீக்ஷை.

தமிழ்.

வகை. I. இலக்கியம் 250 அம்ஸம்.
1. கம்பராமாயணம்பாலகாண்டம்
2. கந்தபுராணம் முதல் 7 படலம்
3. பத்துப்பாட்டு (நெடுநல்வாடை)
4. திருக்குறள் அறத்துப்பால் பரிமேலுரை
5. திருவிளையாடற்புராணவசனம் (நாவலர்).

வகை. II. இலக்கணம் 150 அம்ஸம்.
1. நம்பிஅகப்பொருள்
2. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
3. நன்னூல் விருத்தியுரை.

வகை. III 100 அம்ஸம்.
வியாசமெழுதல்.

வகை. IV. 50 அம்ஸம். (ஒவ்வொன்று)
(a) யாப்பருங்கலக்காரிகையுரை
(b) செய்யுளியற்றல் (வெண்பா ஆசிரியப்பா)
(c) நிகண்டு 11-வது தொகுதி
(d) தருக்கசங்கிரகம் (அன்னம்பட்டீயம்)
(e) இலங்கைச்சரித்திரம்.

ஸம்ஸ்கிருதம்.

வகை. I. காவ்யம் 250 அம்ஸம்.
1. குமாரசம்பவம் முதல் 2 சர்க்கம்
2. மாகம் முதல் 2 சர்க்கம்
3. தசகுமாரசரித்திரம் பூர்வபாகம்.

வகை. II. வியாகரணம் 150 அம்ஸம்.
1. லகுசித்தாந்தகௌமுதி முழுதும்
2. காவ்யாதர்சம் முதற்பாகம்

வகை. III. 100 அம்ஸம்.
(a) மொழிபெயர்த்தல்
(b) பிரத்திவுற்பாதனம்
(c) கடிதமெழுதல்.

வகை. IV. 50 அம்ஸம் ஒவ்வொன்று.
1. அமரம் 2-ம் காண்டம்
2. தர்க்கசங்கிரகம்.

(C) பண்டித பரீக்ஷை.

தமிழ்.

வகை. I இலக்கியம் 250 அம்ஸம்.
1. சீவகசிந்தாமணி முதல் 2 இலம்பகம்
2. பெரியபுராணம் முதல் 350 செய்யுள்
3 புறநானூறுமுதல் 100 செய்யுள் உரை
4 திருக்குறள் பொருட்பால் பரி-உரை
5. கலித்தொகை பாலைக்கலி, மருதக்கலி
6. திருச்சிற்றம்பலக்கோவையுரை.

வகை. II. இலக்கணம் 200 அம்ஸம்.
1. தொல்காப்பியம்சொல்லதிகாரம் சேனாவரையருரை
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் 5 இயல்
3. தண்டியலங்காரம் உரை
4. இறையனாரகப்பொருள் உரை.

வகை. III. 100 அம்ஸம்.
வியாசமெழுதல் (ஆராய்ச்சி)

வகை. IV. (ஒவ்வொன்றும்)50 அம்ஸம்.
1. பிரித்தானியராச்சியசரித்திரம்
2. யாப்பருங்கலவிருத்தி
3. செய்யுளியற்றல் நான்குபாக்களும்
4. தருக்கபரிபாஷை
5. சிவப்பிரகாசம் உரை.

ஸம்ஸ்கிருதம்.

வகை. I. காவ்யம் 250 அம்ஸம்.
1. நைஷதம் 4 சர்க்கம்
2. மேகதூதம் முழுதும்
3. சாகுந்தலநாடகம்
4. காதம்பரிமுழுதும்
5. கிராதார்ச்சுநீயம் 2 சர்க்கம்.

வகை. II. வியாகரணம் 200 அம்ஸம்.
1. பட்டோசிதிக்ஷிதர் சித்தாந்த கௌமுதி பாலமனோரமாவ்யாக்யானம்.

வகை. III. 100 அம்ஸம்.
(1) வியாசம்
(2) மொழிபெயர்த்தல்.

வகை. IV.
1. விருத்தரத்நாகரம்
2. காவ்யாதர்ஸம் முழுதும்
3. தர்க்கம் அன்னம்பட்டீயம்.

யாழ்ப்பாணம்,
24 3 22.

தி. சதாசிவஐயர்,
யா. ஆ. தி. பா. சங்க காரியதரிசி.

விளம்பரம்.

பெங்களூரிற் செய்யப்பட்ட
தினிசுகள்.

:o:

(Q. 17.)

கை தேர்ந்த வேலை. உத்தமமான சரக்குகள்.
சகாயமான விலை.

பெங்களூர் பட்டுப்பீதாம்பரங்கள்
,, பருத்திப் புடைவைகள்
,, கம்பளித் தினிசுகள்
,, பித்தளை வெண்கலப் பாத்திரங்கள்
,, தந்தத்தாற்செய்யப்பட்ட பொருட்கள்

பெங்களூர் வித்துவகைகள்
,, ஒட்டுக் கன்றுகள்
,, ஸ்நானத்துக்கான சுகந்த வஸ்துக்கள்
,, சந்தன அத்தர்
,, பூசர்மா
,, காய் கனிகள்

சிறுபிள்ளைகளுக்காகிய விளையாட்டுப்பொருட்கள்.

எங்கள் விபரமான விலைஜாபிதா வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

K. T. அப்பண்ணு & கொம்பனி,
பெங்களூர்ப் பட்டினம்,
தென்னிந்தியா.

தந்தி விலாசம்:—அப்பண்ணு,
பெங்களூர்ப் பட்டினம்.

அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக்கொண்டு செவ்வையாகச் செய்யப்பட்ட அஷ்டபந்தன மருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றது.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(Q. 22.)

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபையாரால் அச்சிடப்பட்ட புத்தகங்கள் பத்துக்கொன்று கழிவுடன் இங்கே விற்கப்படும். அத்துடன் படங்களுக்குக் கண்ணாடி பிறேம் முதலியன கீழ்க்குறிக்கப்படும் எனது புஸ்தக சாப்பில் போட்டுக்கொடுக்கவும், வேலைமுடிந்த படங்களாயும், தனிப்படங்களாயும் விலைக்குக் கொடுக்கவும், தயாராயிருக்கின்றன.

ந. வ. அரியகுட்டிப்பிள்ளை,
புஸ்தகவியாபாரி,
வல்லுவெட்டித்துறை.

(Mis. 185)

விளம்பரம்.

இத்தாற் சகலரும் அறிக காரைதீவுமேற்கு கனகர் காசிநாதரும் பெண் சிதம்பரமும் மிகவும் வயோதிபர்கள். தொண்ணூறு வயதுக்கு மேற்பட்டவர்கள். தங்கள் காரியங்களைப்பார்க்கும் சக்தியற்றவர்கள் அதுவுமல்லாமல் வயதின் மேலீட்டினால் அவர்கள் புத்தியும், அறிவும் குறைந்ததினால் எவருடைய அனுப்புதலுக்கும் எடுபடுகிறவர்கள். அவர்களைக்கொண்டு உரித்தவர்கள்சிலரும் வேறும் ஆட்களும் அறுதி நன்கொடை ஒற்றி ஈடு முதலிய சாதனங்கள் எழுதுவிக்க ஆயத்தம் செய்கிறார்கள் என அறிகிறோம். ஆனபடியால் நாங்கள் நொத்தாரிசுமாருக்கும் மற்றவர்களுக்கும் அவர்களைக்கொண்டு யாதொரு உறுதியும் எழுதுவிக்கக்கூடாது என்று அறிவிக்கிறோம்.

நா. சுந்தரம்.

1922-ம் ஆ,
பங்குனிமீ 24உ.

(Mis. 193)

யாழ்ப்பாணம்
திறம்சுருட்டு விளம்பரம்.

கனவான்களே!

மலாய்நாட்டிற் போயிருந்து உத்தியோகம் பார்க்கும் இலங்கைவாசிகட்காகவும், மற்றும் யாழ்ப்பாணஞ் சுருட்டில் விருப்பமுள்ள பிரபுக்கட்காகவும், "கோலாலம்பூர்" 15-ம் கட்டை "கண்டங்கெறுப்பு றோட்டு கோவிந்தசாமி கம்பம்" என்னும் இடத்தில் ஓர் பிரபலமாகிய கடை திறந்திருக்கின்றேன். அதில் வாய்க்கு மதுரமானதும், நறுமணங் கமழ்வதும், மிக்க காரமுள்ளதுமாகிய புகையிலையினால் யாழ்ப்பாணமாதிரியாக யாழ்ப்பாணத்தாரா லியற்றப்பட்ட பல தினிசுள்ள சுருட்டுகள் விற்கப்படுகின்றன. அலை ஊர்களிலிருந்து தொகையாக ஓடர்செய்பவர்கட்கும் வி. பி. யில் அனுப்பப்படும்.

இங்ஙனம்,
சு. திருமேனிப்பிள்ளை,
சுருட்டு வியாபாரி.

(Q. 21.)

விளம்பரம்.

தேக்கமரம்! தேக்கமரம்!!

தேக்கமரம் என்னிடம் விலைக்கு உண்டு.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(Mis. 184)

இனாம்! இனாம்!!
கேட்லாக்!!!

தார்மடிகள் சகாயவிலை.

சச்சவுக்கம்.

	ரூ. முதல்.	வரை.
2½×2½ ,,	2-12-0	3- 8-0
4 ×2½ ,,	4- 0-0	6- 0-0
8 ×2¾ ,,	8- 8-0	10- 8-0.
16 ×2½ ,,	16- 0-0	25- 0-0
18 ×2½ ,,	18- 0-0	30- 0-0

கும்பகோணம் கோர்நாட்டுசேலைகள், வெண்பட்டுகள், அங்கவஸ்திரங்கள், பஸ்தானு முதலியன கிடைக்கும். உயர்ந்த சந்தனாதி தைலம் 1 சேர்டப்பி 1-க்கு ரூ. 1-4-0.

வி. ராமய்யர் அன்கோ,
ஜவுளிவர்த்தகம்,
கும்பகோணம்.

V· Ramaiyer & Co,
Silk Cloth Merchants,
Kumbakonam.

(M. 20.)

சமரச போதினி.

இஃதொரு தமிழ் வாரப் பத்திரிகை. தஞ்சைமா நகரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருகிறது. தமிழ் ஜில்லாக்களில் எங்கும் சுதந்தர தாகத்தை எழுப்பிச் சீக்கிரம் இந்தியர்கள் பூரண சுய ஆட்சி பெறுவதற்கு நியாயக் கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம். இந்தியர்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பது இதன் முதல் விரதம். கிராமவாசிகளின் குறைகளை நீக்கிக் கிராமத்தைச் சீர்திருத்தும்படி செய்வதும் அதற்கு வழிகளைக் காண்பிப்பதும் இதன் வேலை. இப்பத்திரிகையில் யாவராயிருந்தாலும், நியாயந் தவறியும், இந்தியர்களுடைய லட்சியத்திற்கு விரோதமாகவும் போவார்கள் இடை நிலையின்று அவு இரக்கமின்றிக் கண்டிக்கப்படுவார்கள். வகுப்பு ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து இந்திய சனசமூகத்தை நிர்மாணிப்பது இப்பத்திரிகையின் லட்சியம். இதற்கு வருஷ சந்தா தபாற்கூலி உட்பட ரூபா 5. ஆறுமாசத்திற்கு ரூபா 3. வெளிநாடுகளுக்கு ரூபா 7. தேசமுன்னேற்றத்திற் கவசியமான எல்லா விஷயங்களும் தெளிவாகவும் தைரியமாகவும் எழுதப்படும். மாதிரிப்பத்திரம் அனுப்பப்படும்.

இ. சூரியநாராயண ஐயர், பீ. ஏ; பீ. எல்;
சமரசபோதினி, பத்திராதிபர்,
தஞ்சாவூர்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna.